DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 35/2020

Prosecution witness PW - 10

| | | |
|---|---|---|
| Name | …. | ஆனந்தன் |
| Father's Name | .... | மாணாவாடி |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 11th day of August 2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது பலகண்டபுத்தூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 03.11.2013 அன்று நான் என் மாமியார் ஊரான பெரணமல்லூர் ஊருக்கு சென்று பலகண்டபுத்தூருக்கு திரும்ப வந்தபோது காலை 6.00 மணிக்கு போலிசார் அங்கு நின்று கொண்டு இருந்தார்கள். அருள் என்பவர் கார்த்தி என்பவரை வெட்டியது சம்பந்தமாக விசாரணை செய்ததற்கு போலிசார் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம்

என்னுடையது தான். அது அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

கடந்த 03.11.2013 அன்று என் மாமியார் ஊருக்கு சென்றுவிட்டு பலகண்டபுத்தூருக்கு வந்தபோது சம்பவ இடத்தில் போலிசார் விசாரித்து கொண்டு இருந்தனர். எதிரி ராஜகோபால் மகன் அருளை போலிசார் பிடித்து விசாரித்த போது தானாக முன்வந்து எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாகவும், மேற்படி போலிசார் விசாரணையில் உடன் இருந்து எதிரி அருள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**